தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சனிக்கிழமை, 1979 பிப்ரவரி 17.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

சமயநல்லூர் மின்நிலைய இருப்புப்பாதை பிரிவு

*வினா எண் 61—திரு. சி. கோவிந்தராசன்: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமயநல்லூர் அனல் மின் நிலையம் மூடப்பட்டுவிட்ட பிறகும் அங்குள்ள ரயில்வே சைடிங் இன்னும் அங்கே இருக்கின்றனவா?

(ஆ) ஆம் எனில், அதற்காக மின் வாரியம் ரயில்வே இலாக்காவுக்கு ஏதாவது தொகை செலுத்திவருகிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) இருப்புப்பாதை சைடிங்ஸ் பராமரிப்பு, வாடகை, பழுதுபார்த்தல் ஆகிய செலவினங்களுக்காக மின் வாரியம் இருப்புப்பாதைத் துறைக்கு 1976–77-ம் ஆண்டில் ரூ, 10,967-ம், 1977–78-ம் ஆண்டில் ரூ. 10,843-ம் கொடுத்தது.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, இந்த சமய நல்லூர் பவர் ஸ்டேஷன் இன்றைக்கு வேலை செய்வதில்லை; அங்கே பவர் உற்பத்தி செய்யப்படவில்லை. அங்கேயிருந்த எந்திரங்கள் எல்லாம் விற்கப்பட்டுவிட்டன என்பது ஏற்கனவே இந்த அவையில் பேசப்பட்டுள்ள ஒன்றாகும். அப்பேர்ப்பட்ட இடத்திற்கு மறுபடியும் இந்த இரயில்வே லையன் போட்டு வைத்திருப்பதன் நோக்கமென்ன? அதனால் மின்வாரியத்திற்கு என்ன பயன் கிடைக்கிறது? என்ன அத்தியாவசியம்? அந்த இருப்புப் பாதையை மின்வாரியம் போக்குவரத்திற்குப் பயன்படுத்து கின்றதா என்பதை அறிய விரும்புகின்றேன்.

[1979 பிப்ரவரி 17

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்த இருப்புப்பாதை மின்வாரியத்திற்கு மிகவும் பயனுள்ளதாக இருந்து வருகிறது. சிமெண்டு, இரும்பு, ஸ்டீல், எம்.எஸ். சானல்கள், ஆங்கில்கள், கம்பிகள் போன்றவைகளை பசுமலை யிலிருந்து எடுத்துவர இது பயன்படுத்தப்பட்டு வருகிறது. இருப்புப்பாதை மூலம் அல்லாமல், சாலை மார்க்கமாக எடுத்துச் சென்றிருந்தால், மின் வாரியத்திற்கு இந்த இரண்டு ஆண்டுகளில் ரூ. 62,814 செலவிட நேரிட்டிருக்கும். இப்போது அது ரூ. 20,000 அளவிலே எடுத்துச் செல்ல வசதி ஏற்பட்டிருக்கிறது.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமயநல்லூர் அனல் மின்திட்டம் மூடப் பட்டதாக கூறப்பட்டிருக்கிறது. அங்கே இருந்த எந்திரங்கள் எல்லாம் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டனவா அல்லது விற்கப் பட்டனவா ? விற்கப்பட்டதென்றால் எந்த முறையில் விற்கப் பட்டது ? டெண்டர் மூலமாகவா அல்லது ஏலத்தின் மூலமாகவா? அதனால் சர்க்காருக்கு லாபமா, நஷ்டமா என்பதை அறிய விரும்பு கிறேன் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சமயநல்லூர் அனல் மின்திட்டம் மூடப்படவில்லை. ஏலம் போடப் பட்டது. அதனால் லாபமா, நஷ்டமா என்ற விவரங்கள் ஏற் கனவே சர்க்காரியா அறிக்கையிலே வெளிவந்துள்ளன. அதன்படி மின்வாரியத்திற்கு வரவேண்டிய போதுமான வருவாய் வர வில்லை. அதனால் மின்வாரியத்திற்கு இழப்பு ஏற்பட்டது. அந்த இழப்பு தகாத முறையில் ஏற்பட்டது என்ற விவரங்கள் ஏற் கனவே சர்க்காரியா அறிக்கையிலே வெளி வந்திருக்கிறது.

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அங்குள்ள கட்டிடங்கள், மற்ற இடங்கள் எதற்காகப் பயன் படுத்தப்படுகின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மின்வாரியத்தின் மற்றப் பணிகளுக்கு அந்த இடம் பயன்படுத்தப் பட்டு வருகிறது. அங்கே ஸ்டோர்ஸ், மற்றும் டிரான்ஸ்பார்மர் மெயின்டெனென்ஸ் பணிகள் நடைபெற்று வருகின்றது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், 'அடானமி பாடி' என்ற பெயரிலே தன்னிச்சையாக அரசைக்கூட கலக்காமல். அவர்களாகவே 105 இலட்சத்திற்கு ஆரம்பிக்கப்பட்டு, 59 லட்சத் திற்கு விற்று, இன்றைக்கு ஆரம்பிப்பதானால் 5 கோடி ரூபாய் செலவாகுமே? அந்த அடானமி பாடிக்கு இருக்கக்கூடிய அதிகாரத்தை மாற்றி, திருத்தியமைப்பதற்கு இந்தச் சர்க்கார் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1979 பிப்ரவரி 17]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல அந்த அனல் மின் நிலையம் 106 இலட்சம் ரூபாயில் அன்றைய தினம் நிறுவப்பட்டாலும், அதை ஏலமிட்ட தேதியில் கிட்டத்தட்ட 420இலட்சம் பெறுமானமுள்ளது. ஆனால் ஏலத்திலே 59 இலட்சம் ரூபாய் கிடைத்திருக்கிறது. பொதுவாக, மின்வாரியம் புதிதாக மின் திட்டங்களை ஆரம்பிக்கின்றபோது இந்த அரசாங்கத்தின அனுமதியைக் கோருகிறது. ஆனால், மின்திட்டங்களை அவர்கள ஏலம் போடுகிறபோது அல்லது மூடுகிறபோது அல்லது விற்கிற போது அரசாங்கத்தின் அனுமதி பெறவேண்டுமென்ற நியதி இல்லை. அதற்கான சட்டமும் இல்லை. ஆகவே இதைப்பற்றி அரசாங்கம் தீவிர பரிசீலனை செய்து, மின்வாரியம் இத்தகைய காரியங்களை மேற்கொள்ளுகிறபோது அரசையும் கலந்துதான் செய்ய வேண்டுமென்ற ஒரு நிலையை உருவாக்குவதற்கு நிச்சயமாக பரிசீலனை செய்யும் என்பதையும், சுய ஆட்சி இந்த வகையில் பொருத்தம் இல்லாதது என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

நெய்வேலி இரண்டாவது மின் நிலையம்.

*வினா எண் 62—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு மின் சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

நெய்வேலியில் இரண்டாவது மின் நிலையம் அமைக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இது மத்திய அரசு சம் பந்தப்பட்டது. 1978 பிப்ரவரி மாதத்தில் இரண்டாவது பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் வெட்டுவதற்கும், 630 மெகாவாட் திறனுள்ள இரண்டாவது அனல் மின் நிலையம் அமைப்பதற்கும் தேவையான ஒப்புதலை நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத்திற்கு, மத்திய அரசு அனுப்பியுள்ளது. நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகம் தற்போது திட்டத்தினை நிறைவேற்றுவதற்கான பணிகளை மேற்கொண்டுள்ளது.

திரு. மா. மணிமாறன்: நெய்வேலியில் இரண்டாவது சுரங்கத்தை வெட்ட வேண்டுமென்பது தமிழகத்தின் நீண்ட நெடுநாள் கோரிக்கையாக இருந்து வருகிறது. இந்தத் திட்டத்தை இப்போதாவது விரைந்து செயலாக்க முன் வருவார்களா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: நான் சொன்னது போல் பிப்ரவரி 1978-ல் இந்தத் திட்டத்திற்கான அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது மின் உற்பத்தியில் தன்னிறைவு பெற வேண்டுமென்று நினைக்கிற தமிழகம் இத்தகைய திட்டங்கள்